

திருப்பூர் மாவட்டம், பல்லடம் நகராட்சி மற்றும் ரோட்டரி பல்லடம் ரெயின்போ, பார்வை 2.4, சார்பில் நடைபெற்ற மாரத்தான் நிகழ்ச்சியை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் கொடி அசைத்து துவக்கி துவக்கி வைத்தார். இதில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ப.ராஜ்குமார், பல்லடம் நகரக் கழகச் செயலாளர் ந.ராஜேந்திரகுமார், பல்லடம் நகர்மன்றத் தலைவர் கவிதாமணி ராஜேந்திரகுமார் உள்பட நகர்மன்ற உறுப்பினர்கள், ரோட்டரி உறுப்பினர்கள் , கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




தீப ஒளி திருநாளையொட்டி இந்த ஆண்டும் ஆவின் பால் நிறுவனத்தின் சார்பில் இனிப்பு மற்றும் கார வகைகள் சுகாதாரமாகவும் சுத்தமாகவும் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இது தொடர்பாக சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விற்பனையை துவக்கி வைத்து சுற்றுலாத்துறை அமைச்சர் இராஜேந்திரன் பேசினார். இந்நிகழ்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, ஆவின் பால் நிறுவனத்தின் பொது மேலாளர் குமரேஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மாவட்டம் விளாங்குடியில்

# ரூ.32.76 லட்சம் மதிப்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், அக். 25 -

அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றியம், விளாங்குடி ஊராட்சியில் ரூ.32.76 லட்சம் மதிப்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தொடங்கி வைத்து, விளாங்குடி ஊராட்சி அண்ணா பல்கலைகழக உறுப்பு பொறியியல் கல்லூரிக்காக நெடுஞ்சாலை பிரிவில் ரூ.7.50. இலட்சம் மதிப்பீட்டில் நுழைவு வாயில் (Arch) அமையவுள்ள இடத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி கலந்து கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க அரியலூர் மாவட்டத்தில் கிராமங்கள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் கிராம சாலை உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் அரியலூர் மாவட்டத்திற்குட்பட்ட விளாங்குடி ஊராட்சி பகுதியில் வளர்ச்சித் திட்டப் பணிகளை துவக்கி வைத்தார்.

அதன்படி விளாங்குடி ஊராட்சியில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.25.26 இலட்சம் மதிப்பீட்டில் விளாங்குடி பெரிய ஏரியில் 02 மதகுகள் அமைக்கும் பணிகளை துவக்கி வைத்தார். தொடர்ந்து விளாங்குடி ஊராட்சி அண்ணா பல்கலைகழக உறுப்பு பொறியியல் கல்லூரிக்காக நெடுஞ்சாலை பிரிவில் ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் நுழைவு வாயில் (Arch) அமையவுள்ள இடத்தினை பார்வையிட்டு, திட்ட வரைபடத்தையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், ஒன்றியக் கழகச் செயலாளர் மா.அன்பழகன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், அரசு வழக்கறிஞர் முத்தமிழ்செல்வன், மாவட்ட அமைப்பாசார ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் வேலு மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# கரூர் மாவட்டத்தில் அரசின் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## சட்டமன்ற பேரவையின் அரசு உறுதிமொழி குழுவினர் ஆய்வு!

கரூர், அக். 25 -

காவிரி கதவணை புதிய பால்பண்ணை டி.என்.பி.எல். விரிவாக்கம் உள்ளிட்ட கரூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் திராவிட மாடல் அரசின் வளர்ச்சி திட்ட பணிகளை சட்டமன்ற பேரவையின் அரசு உறுதிமொழி குழுவினர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

கரூர் மாவட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி முயற்சியில் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் அரசு உறுதிமொழிக் குழு அரசு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அரசு உறுதிமொழிக் குழுத் தலைவர் சட்டமன்ற உறுப்பினர் தி.வேல் முருகன் தலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவர் மீ.தங்கவேல் மற்றும் அரசு உறுதிமொழிக்குழு உறுப்பினர்களான சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்த் ரமேஷ் சோழிங்கநல்லூர்).இரா.அருள்(சேலம் மேற்கு). ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் (விருதுநகர்), மு.பூமிநாதன் (மதுரை தெற்கு), சா.மாங்குடி (காரைக்குடி), எம்.கே. மோகன் (அண்ணா நகர்) ஆகியோர் முன்னிலையில் 23.10.2024 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை உறுதிமொழி குழு தலைவர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2024-2025 ஆம் ஆண்டுகளுக்கான அரசு உறுதி மொழிக் குழு கரூர் மாவட்டத்தில் நிலுவையில் உள்ள அரசு உறுதி மொழிகள் மீது தொடர்புடைய துறைகளின் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து இன்றைய தினம் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் அரசு உறுதி மொழிக் குழு இரண்டு நாள் பயணமாக புதுக்கோட்டை மற்றும் கரூர் மாவட்டங்களில் ஆய்வு மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் புகலூர் தமிழ்நாடு காகித ஆலை நிறுவனத்தில் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் மேம்பாட்டு பணிகளையும்,நஞ்சை புகளூரில் காவிரி ஆற்றின் குறுக்கே ரூ.406 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கதவணையையும், சுக்காளியூர் ஆவின் நிறுவனத்தில் புதிதாக விரிவாக்கம் செய்யபட்டுள்ள பால் பண்ணையையும்.

அதனைத்தொடர்ந்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக வளாகத்தில் கியூ பிரிவு குற்றப்புலனாய்வுத் துறைக்கு ரூ. 1.06 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய அலுவலக கட்டுமாணப்பணிகளையும், கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வெளி மற்றும் உள் நோயாளிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை முறைகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கரூர் பேருந்து நிலையத்தில் உள்ள கழிவறைகளின் சுகாதாரம் குறித்து திடீர் ஆய்வு மேற்கொண்டு கழிவறைகளை சுகாதாரமாக வைத்துக்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளில் விற்கப்படும் உணவுப்பொருட்களின் தரம் குறித்து ஆய்வு மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அரசு உறுதி மொழிக்குழு தலைவர் சட்டமன்ற உறுப்பினர் தி. வேல்முருகன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கா. பெரோஸ் கான் அப்துல்லா, கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செ.ஜோதிமணி. இரா. மாணிக்கம் (குளித்தலை), ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி), க. சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), மாநகராட்சி மேயர் வெ.கவிதா கணேசன், மாவட்ட வருவாய் அலுவலர்கள் ம.கண்ணன். கு.விமல்ராஜ் (நில மெடுப்பு), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஸ்ரீலேகா தமிழ்ச்செல்வன், மகளிர் திட்ட இயக்குநர் பாபு, மாவட்ட ஆட்சி தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) யுரோகா, சட்டமன்றப் பேரவை துணைச் செயவனர் திரு ஸ்ரீரா.ரவி, சார்புச் செயலாளர் த. பியூலஜா உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு முதல்வர் வழிகாட்டுதல்களின்படி கிராமப்புற மாணவர்களின்

# கல்வியை மேம்படுத்த மாணவ - மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## சுதாகரன் — அருள்மொழி வழங்கினர்!

திருவாரூர், அக். 25 -

தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் அவர்களின் சாதனைகள், கல்விக்காக முதலவர் தரும் சாதனை திட்டங்களின் உந்துதலால், கிராமப்புற அரசுப்பள்ளி மாணவ - மாணவிகளின் கல்வியை ஊக்கப்படுத்தும் வகையில் மாவட்ட பிரதிநிதி பைங்காநாடு சுதாகரன் - அருள்மொழி தம்பதியினர் தங்களது சிறு முயற்சியாக அரசுப் பள்ளி மாணவ - மாணவிகளுக்கு கல்வி உபகரணங்களை வழங்கி மக்களின் பாராட்டை பெற்றுள்ளனர்.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகே உள்ள பைங்காநாடு கிராமத்தை சேர்ந்தவர் சுதாகரன் - அருள்மொழி தம்பதியினர். சுதாகரன் தி.மு. கழக மாவட்ட பிரதிநிதியாகவும், அருள்மொழி தி.மு.க. ஒன்றியக் குழு உறுப்பினராவும் உள்ளனர்.

தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா ஆலோசனைகளின்படி எப்போதும் பொதுநல சேவைகளில் ஈடுபட்டுவரும் சுதாகரன் - அருள்மொழி தம்பதியினர், மழை நேரங்களில் தனது கிராம பகுதியில் அரசு பள்ளிக்கு வரும் மாணவர்கள் நனைந்தபடி வருவதையும், தலையில் பிளாஸ்டிக் பேப்பர்களை கட்டி வருவதையும் கண்டு அவர்களுக்கு, மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை போற்றும் வகையில், தங்களது சார்பில் 300க்கும் மேற்பட்ட குடைகளையும் கல்வி உபகரணங்களையும் இலவசமாக வழங்கியுள்ளனர்.

தங்களது திருமண நாள் மற்றும் பிறந்தநாள் இவைகளை முன்னிட்டு பைங்காநாடு அரசு பள்ளி எதிரே கிராமபொதுமக்கள் முன்னிலையில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவாக, மன்னார்குடி சரக துணை காவல் கண்காணிப்பாளர் அஸ்வத் ஆண்டோ ஆரோக்யராஜ், பரவாக்கோட்டை காவல் ஆய்வாளர் சசிகலா, ஒன்றியச் செயலாளர் டி.எஸ்.டி. முத்துவேல், பாசறை ராஜேந்திரன் மற்றும் கிராமநிர்வாகி சேவு, மலர்வேந்தன் உள்ளிட்ட அனைத்து கட்சிகளின் நிர்வாகிகள் முன்னிலை வகிக்க நடைபெற்றது.

அப்போது 300க்கும் மேற்பட்ட பள்ளிக் குழந்தைகளுக்கு குடைகள் உள்ளிட்ட கல்வி உபகரணங்கள், மரக்கன்றுகள், யோகா சிறப்புப் பயிற்சிகள், கிராம பாதுக்கப்பை உறுதிப்படுத்தும் வகையில் மூன்று கண்காணிப்பு கேமராக்கள், டி.வி. மானிட்டர் வழங்கப்பட்டன. மேலும் பள்ளி மாணவ - மாணவிகளுக்கு பிளாஸ்டிக் ஒழிப்பு பிரச்சாரம், மழைநீர் சேகரிப்பு பிரச்சாரம் உள்ளிட்டவைகளும் வழங்கப்பட்டது. திராவிட மடல் ஆட்சியின் நோக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் சுதாகரன் அருள்மொழி தம்பதியினரின் இந்த சேவை பொது மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு!

திருப்பூர் வடக்கு மாவட்டம், திருப்பூர் தெற்கு மாநகரம், நல்லூர் பகுதி, 46வது வட்டத்தைச் சேர்ந்த க.இரவி அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, **கழகத் தலைவர்** அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 23.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### தி.மு.க. 15ஆவது பொதுத்தேர்தல்

# தேனி தெற்கு மாவட்டம், சின்னமனூர் கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளர், உத்தமபாளையம் கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளர் - கம்பம் தெற்கு நகரம், மாவட்ட பிரதிநிதி மற்றும் பண்ணைபுரம் பேரூர் அவைத்தலைவர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல்

# தேர்தல் முடிவு

## தலைமைக் கழக அறிவிப்பு!

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், தேனி தெற்கு மாவட்டம், சின்னமனூர் கிழக்கு ஒன்றிய துணைச்செயலாளர் (ஆதிதிராவிடர்) ம.பதினெட்டான் மறைவெய்திய காரணத்தாலும், உத்தமபாளையம் கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளர் (பொது) எஸ்.முகமதுயூனுஷ் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டதாலும் - கம்பம் தெற்கு நகரம், மாவட்ட பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட வி. சுந்தரேசன் மறைவெய்திய காரணத்தாலும் - பண்ணைபுரம் பேரூர் அவைத்தலைவர் டி.வி.டி.ஜானகிராமன் மறைவெய்திய காரணத்தாலும்;

தேனி தெற்கு மாவட்டம், சின்னமனூர் கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளர் (ஆதிதிராவிடர்) - உத்தமபாளையம் கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளர் (பொது) - கம்பம் தெற்கு நகரம், மாவட்ட பிரதிநிதி - உத்தமபாளையம் மேற்கு ஒன்றியம், பண்ணைபுரம் பேரூர் அவைத்தலைவர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, அக்டோபர் 22 (செவ்வாய்க் கிழமை) அன்று ஒன்றியக் கழகப் பொறுப்பு ஒன்றுக்கு ரூ.1000/- வீதமும்; பேரூர்க் கழகப் பொறுப்பு ஒன்றுக்கு ரூ.500/- வீதமும் வேட்புமனுக் கட்டணமாக தலைமைக் கழகத்தில் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்"" என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

தேனி தெற்கு மாவட்டம், சின்னமனூர் கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளர் (ஆதிதிராவிடர்) பொறுப்புக்கு தா. கருப்பையா அவர்கள் மட்டும் - உத்தமபாளையம் கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளர் (பொது) பொறுப்புக்கு ரா. முருகேசன் அவர்கள் மட்டும் - கம்பம் தெற்கு நகரம், மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கு ம.ராஜன் அவர்கள் மட்டும் - உத்தமபாளையம் மேற்கு ஒன்றியம், பண்ணைபுரம் பேரூர் அவைத்தலைவர் பொறுப்புக்கு பெ.துரைச்சாமி அவர்கள் மட்டும் வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவர்களது மனுக்கள் ஏற்கப்பட்டு,

**தேனி தெற்கு மாவட்டம், சின்னமனூர் கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளராக (ஆதிதிராவிடர்)**

**திரு. தா.கருப்பையா,** எண். 75பி/54, இந்திரா காலனி, எரசக்கநாயக்கனூர், தேனி மாவட்டம் அவர்களும்;

**உத்தமபாளையம் கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளராக (பொது)**

**திரு. ரா.முருகேசன்,** எண். 32, தேரடித் தெரு, உத்தமபாளையம், தேனி மாவட்டம் அவர்களும்;

**கம்பம் தெற்கு நகரம், மாவட்ட பிரதிநிதியாக**

**திரு. ம. ராஜன்,** வார்டு - 17/டி-5, நந்தகோபாலன் கோவில் தெரு, கம்பம் - 625 516, தேனி மாவட்டம் அவர்களும்;

**உத்தமபாளையம் மேற்கு ஒன்றியம், பண்ணைபுரம் பேரூர் அவைத்தலைவராக**

**திரு. பெ. துரைச்சாமி,** வார்டு-5, தெற்கு மெயின் வீதி, பண்ணைபுரம் அஞ்சல், உத்தமபாளையம், தேனி மாவட்டம்-625524 அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் கடலூர் மாவட்டம், நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இறையூர் ஊராட்சியில் புதியதாக கட்டப்பட்டுள்ள துணை சுகாதார நிலையத்தினை 23.10.2024 அன்று திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் திருமதி இரா.சரண்யா உட்பட பலர் உள்ளனர்.




அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றியம், விளாங்குடி ஊராட்சி அண்ணா பல்கலைகழக உறுப்பு பொறியியல் கல்லூரிக்காக நெஞ்சாலை பிரிவில் அமையவுள்ள நுழைவு வாயில் (Arch) இடத்தினையும், திட்ட வரைபடத்தினையும் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி மற்றும் பலர் உள்ளனர்.